## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No.320/2009

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 24.02.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name : ராமன் Father's Name : சின்னசாமி

துவக்க நேரம்: 12.54 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**2, 4 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1. 2, 3 ஆம் பிரதிவாதிகள் இருவரும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். 3-ஆம் பிரதிவாதி இறந்ததால் 4 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ-1 ஆவணத்தில் 2, 3 பிரதிவாதிகள் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் 1-ஆம் பிரதிவாதியிடம் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ள விவரம் தெரிந்திருந்தும் 2, 3 பிரதிவாதிகள் கிரயம் வாங்கினார்கள், அதனால் அவர்களை தரப்பினர்களாக சேர்த்துள்ளேன்.

2. வா.சா.ஆ.1 பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகள் கிரயம் வாங்கிய ஆவணம் செல்லாது என்று இவ்வழக்கில் கோரவில்லை என்றால் சரியல்ல, கேட்டுள்ளேன். நான் சொல்வது தவறு என்றாலும், அதுபோன்று எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றாலும் சரியல்ல. அவ்வாறு கிரய ஆவணம் செல்லாது என பரிகாரம் கோரி நீதிமன்ற கட்டணம் எதுவும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல, செலுத்தியுள்ளேன். நான் தற்பொழுது வழக்கிற்காக நீதிமன்ற கட்டணம் செலுத்தியதாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. தாவா சொத்தில் கிரய ஒப்பந்த ஆவணத்திற்கு பின்னிட்டு நான் அனுபவத்தில் இருந்து வருவதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் ரூ.35,000/- செலவு செய்து பைப் லைன் அமைத்ததாக கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் உள்ள கிணற்றில் எனக்கும், 1-ஆம் பிரதிவாதிக்கும் கூட்டு உரிமை உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணற்றில் உள்ள பாகத்தை நான் ராஜமாணிக்கம் என்பவரிடம் இருந்து கிரயம் பெற்றேன் என்றால் சரிதான்

4. நான் மேற்படி கிணறு பாகத்தை கிரயம் பெற்றதிலிருந்து 1-ஆம் பிரதிவாதி அவரது நிலத்தை பயிர் செய்யக்கூடாது என இடையூறு செய்து வந்தேன் என்றால் சரியல்ல. கடந்த 26.06.2009 அன்று நானும், எனது ஆட்களும் சேர்ந்து 1-ஆம் பிரதிவாதியை தாக்கியதாக ஆத்தூர் காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு என்மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான், ஆனால் அந்த வழக்கு பொய் வழக்கு என 1-ஆம் பிரதிவாதியே ஒப்புக் கொண்டதால் அவ்வழக்கிலிருந்து எங்களை விடுதலை செய்தார்கள். நான் சொல்வது தவறு என்றாலும் அதுபோல் 1-ஆம் பிரதிவாதி ஒப்புக் கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி குற்ற வழக்கு மேற்படி 1-ஆம் பிரதிவாதியிடம் தாவா சொத்தை எனக்கு விற்காமல் 2, 3 பிரதிவாதிகளிடம் விற்றதை கேட்டு நான் அவரை தாக்கியதால் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

5. கடந்த 24.06.2009 அன்று 2, 3 பிரதிவாதிகள் சரியான பிரதிபலனுக்கு 1-ஆம் பிரதிவாதியிடம் தாவா சொத்தை வா.சா.ஆ.2-ன் மூலம் கிரயம் பெற்றார் என்றாலும், அதன் பின்னிட்டுதான் 26.06.2009 அன்று 1-ஆம் பிரதிவாதியை தாக்கியதான என்மீது

வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றாலும், 2, 3 பிரதிவாதிகள் தாவா சொத்திற்கான வில்லங்க சான்றினை சரிபார்த்து எவ்வித வில்லங்கமும் இல்லை என்று சரிபார்த்த பின்னர்தான் கிரயம் வாங்கினார்கள் என்றாலும் சரியல்ல.

6. கடந்த 24.06.2009 அன்று ஏற்படுத்தப்பட்ட கிரயம் எனக்கு எப்பொழுது தெரியும் என்றால் 2 நாள் கழித்துதான் தெரியும். மேற்படி கிரயம் தெரிந்த பின்னிட்டு உடனடியாக 1, 2, 3 பிரதிவாதிகளுக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல, அனுப்பியுள்ளேன். நான் சொல்வது போல் உடனடியாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்றாலும், 17.08.2009 அன்றுதான் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் 1-ஆம் பிரதிவாதியிடம் கிரய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தியது உண்மை என்றால் 2, 3 பிரதிவாதிகள் கிரயம் பெற்ற விவரம் தெரிந்த உடனே மேற்படி கிரய ஒப்பந்தம் பற்றி அறிவிப்பு வழங்கியிருப்பேன் என்றாலும், மேற்படி கிரயத்திற்கு பின்னிட்டு கிரய ஒப்பந்த ஆவணம் தயாரித்து அதன்பின்பு 2 மாத காலம் தாமதமாக அறிவிப்பு வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் காலதாமதமாக அனுப்பிய அறிவிப்பிற்கு 2, 3 பிரதிவாதிகள் பதிலறிவிப்பு வழங்கியுள்ளார்கள் என்றால் அதுபற்றி தெரியவில்லை.

7. நான் கூறுவதுபோல் 1-ஆம் பிரதிவாதி கிரய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தியிருந்தால் அதில் அவரது கையெழுத்தும், கைரேகையையும் வைத்திருப்பார் என்றாலும், ஆனால் அவ்வாறு அந்த ஆவணத்தில் 1-ஆம் பிரதிவாதியின் கைரேகை பதிவு செய்யப்படவில்லை என்றாலும், அதனால் அந்த ஆவணம் என்னால் தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆனது என்னால் போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்பதால் மேற்படி ஆவணம் சென்னை கைரேகை நிபுணர் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டது சரிதான்.

மேற்படி ஆவணத்தில் 1-ஆம் பிரதிவாதியின் கையொப்பத்தில் மாறுபாடு உள்ளதாக ஆய்வறிக்கை வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் தற்பொழுது வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. ச.எண்.168/6A-ல் உள்ள நிலம் கிணறு பாகம் என்றாலும், விவசாய நிலம் இல்லை என்றாலும் சரிதான். ச.எண்.168/6A-ல் உள்ள நிலம் கிணறு பாகம் என்பதால் நான் நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு அதில் பைப் லைன் அமைக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகள் 1-ஆம் பிரதிவாதியிடம் சட்டப்படி கிரயம் பெற்று வருவாய் ஆவணங்கள் அவர்களது பெயருக்கு மாற்றப்பட்டு அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் போலியான ஆவணம் என்பதால் அதனடிப்படையில் 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக என்னால் எந்த பரிகாரமும் கேட்கமுடியாது என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

2, 4 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 01.28 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.320/2009, Dt.24.02.2026.